1982 மார்ச் 25]

மன்றங்களே ஏற்று நடத்துவது என்கின்ற முடிவினை மேற்கொண்டு இதிருக்கிறோம். அதற்குரிய சட்டத்திருத்தம், இந்த சட்டமன்றக் கூட்டத் தொடரிலே கொண்டுவர இருக்கிறோம். ஆகவே, அந்தச் சந்தைகளை எடுப்பதன் மூலமாக உள்ளாட்சி மன்றங்களுக்கான வருமானத்தை அதிகரிக்க வேண்டுமென்பதற்காக ஏறத்தாழ சுமார் 10 கோடி ரூபாய் அதன் மூலமாக வருமானம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(முற்பகல் 9-30)

திரு. ஏ. தங்கராசு : தலைவரவர்களே, தமிழ்நாட்டில் உள்ளாட்சி துறையின் எல்லையில் வாரச்சந்தைகள் 107 என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் சொல்லியிருக்கிறார்கள். உள்ளாட்சி நிறுவனங்களுக்கு வருவாயை அதிகரிக்கின்ற வகையில் தனியார் நடத்தும் வார சந்தையை உடனடியாக 'லாண்ட் அக்குசிஷன்' செய்து சம்பந்தப்பட்ட பஞ்சாயத்துக்களே வாரச் சந்தை நடத்துவதற்கு தகுந்த நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, சட்டத் திருத்தம் இந்தத் தொடர் கூட்டத்திலேயே கொண்டு வரப்பட்டு, உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில் சொல்லும் போது தனியார் நடத்தும் வாரச்சந்தை, தினசரி சந்தைகள் ஒழிக்கப்படும் என்று சொன்னார்கள். இந்த மாநிலத்தில் பல்வேறு இடங்களில் ஆண்டுக்கு ஒருமுறை தனிப்பட்டவர்கள் மாட்டுச் சந்தை நடத்தி ஏராளமாக இலாபம் பெறுகிறார்கள். அந்த மாட்டுச் சந்தைகளையும் ஏற்று நடத்த அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே; மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற சந்தைகள் நாம் பிறப்பிக்கின்ற சட்டத்தின் கட்டுக்குள் அடங்காவிட்டால் அதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

சென்னை நேதாஜி சுபாஸ் சந்திரபோஸ் சாலையில் செய்யப்பட்டுள்ள ஆக்கிரமிப்பு.

*வினா எண். 654—திரு. எஸ். டி. உகம் சந்த் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை அளிப்பாரா—

(அ) சென்னை நகரம், நேதாஜீ சுபாஸ் சந்திரபோஸ் ரோட்டில் உள்ள பேரறிஞர் அண்ணா அவர்களால் 1959-ஆம் ஆண்டு திறக்கப்பட்ட குடிநீர்த் தொட்டியை மறைக்கின்ற அளவில் தனிநபர் ஆக்கிரமிப்பு செய்துள்ளார்களா ?

[1982 மார்ச் 25

(ஆ) ஆம் எனில், அதை அப்புறப்படுத்த அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) மற்றும் (ஆ) : குடிநீர்த் தொட்டி அருகே உள்ள இடம் ஆக்கிரமிப்பு செய்யப் பட்டுள்ளது. ஆக்ரமிப்பாளர் அதை நீக்குவதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளுக்கு எதிராக நிரந்தர தடையை நீதிமன்றத்தில் பெற்றுள்ளார். தற்சமயம் நீதி விசாரணையிலுள்ளது.

திரு. எஸ். டி. உகம் சந்த் : தலைவரவர்களே, போக்கு வரத்து நெரிசலான இருக்கிறம அந்தப் பகுதியில் இதைப் போன்ற ஆக்ரமிப்பு அதிகரித்து வருகின்றது. ஆரம்பக் காலத்தில் ஏன் மாநகராட்சி அதிகாரிகள் அதைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வில்லை ? அவர்களுடன் கூட்டுச் சேர்ந்து இருக்கின்றார்கள் என்று பரவலாகப் பேசப்படுகின்றது. அப்படி உடந்தையாக இருக்கின்றவர்கள் மீது நடவடிக்கை எடுத்து, ஆக்ரமிப்பு அகற்றப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, ஆக்கிரமிப்புக்கு அதிகாரிகள் உடந்தையாக இருந்தால் அவர்கள் மீது கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. சு. பாலன் : தலைவரவர்களே, சுபாஷ் சந்திரபோஸ் ரோட்டில் நடைபாதையில் ஏராளமான தனிப்பட்டவர்கள் கடை களை வைத்து ஆக்கிரமிப்பு செய்திருக்கிறார்கள். 1977-78-ல் இதே மன்றத்தில் அந்தக் கடைகளை அகற்ற வேண்டுமென்று சொல்லி அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு, அகற்றப்பட்டன. மீண்டும் அந்தக் கடைகளை வைத்து ஆக்கிரமிப்பு செய்திருக் கிறார்கள். அது போக்குவரத்திற்கு பெருத்த இடையூராக இருக்கிறது. மறுபடியும் ஆக்கிரமிப்புக்கு யார் அனுமதி கொடுத் தார்கள் ? ஆனால் அந்தக் கடைகளுக்கு இப்போது பணம் வசூல் செய்யப்படுகின்றது. மாநகராட்சிக்கு அந்தப் பணம் வரவேண்டு மென்றால், மாநகராட்சியே அந்தக் கடைகளை அனுமதித்து, பணம் வசூல் செய்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது என். எஸ். சி. போஸ் ரோட்டில் இருக்கக்கூடிய நடைபாதை கடைகள் பற்றியது அதைப் போல சைனா பஜார், ஈவனிங் பஜார்—இப்படி பல்வேறு இடங்களில் நடைபாதை கடைகள் அனுமதிக்கப்பட்டிருக்கின்றன. ஏற்கெனவே பல்வேறு சங்கங்கள் அத்தகைய இடங்களில் கடை கள் வைக்க அனுமதி கேட்டார்கள். அதிலே திராவிட முன் னேற்றக் கழக சங்கமும் ஒன்று. இந்திய கம்யூனிஸ்ட்கட்சி சங்கம்,

1982 மார்ச் 25]

அண்ணா தி. மு. க. சங்கம், மற்றும் பல்வேறு சங்கங்கள் சேர்ந்து கோரிக்கை வைத்ததால் அங்கே கடைகள் நடத்த அனுமதிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பாபு ஜனார்த்தனன்: தலைவரவர்களே, பொதுவாக அரசினுடைய இடத்திலே கடை வைத்திருக்கிறவர்கள் அல்லது ஆக்கிரமிப்பு செய்திருக்கிறவர்கள், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும்போது கோர்ட்டுக்குச் சென்று ஸ்டே வாங்கிவிடுகிறார்கள். இப்படிப்பட்ட ஆக்கிரமிப்பாளர்கள் உயர்நீதிமன்றத்திற்கு அல்லது உச்ச நீதிமன்றத்திற்குச் சென்றால் பேசிஸ் இல்லாமல் கூட ஸ்டே கொடுத்து விடுகிறார்கள். இது சரியா? அரசாங்கம் இதற்கு ஒரு முடிவு செய்து, அரசுக்குச் சொந்தமான அல்லது புறம்போக்கு நிலத்தில் தகாத முறையில் ஆக்கிரமிப்புச் செய்வதைத் தடுக்க நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, ஆக்கிரமிப்பு செய்வது சரியா, முறையா என்ற கேள்விக்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்தான் பதில் சொல்ல வேண்டும். ஏனென்றால், அவர்கள் ஆட்சிக் காலத்தில் கூட இப்படிப்பட்ட ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு, அவர்கள் நீதிமன்றத்தில் தடை பெற்றிருக்கிறார்கள். அதன்பிறகு நீக்கப்பட்டார்கள் அல்லது தொடர்ந்து இருக்கிறார்கள் என்ற வரலாறு இருக்கிறது. ஆக்கிரமிப்பு என்பது எந்த ஆட்சிக் காலத்திலும் இருந்து வருகிறது. ஆனால் ஆக்கிரமிப்புகளை தவிர்க்க நாம் நடவடிக்கை எடுக்கிறோம். நீதிமன்றத்தில் தடை கொடுத்துவிடுகிறார்கள். ஆகவே, இதுபற்றி நீதிமன்றம்தான் தீர்ப்பு கொடுக்க வேண்டும்.

திரு. செ. சிவசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, நடைபாதைக் கடைகள் அனுமதிக்கப்பட்டு இருந்தும், ஒவ்வொரு நாளும் போலீஸ் தொந்தரவு இருப்பது உடனடியாக நிறுத்தப்படுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, நாம் அனுமதித்த கடைகள் தவிர மற்றக் கடைகள் வருமானால், போலீஸ் தொந்தரவு கண்டிப்பாக இருக்கும்.

சென்னை கீழ்ப்பாக்கம் மனநிலை மருத்துவமனைக் கட்டிடங்கள்,

*வினா எண் 655—திரு. செ. சிவசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY — வாய்மையே வெல்லும் — TRUTH ALONE TRIUMPHS